

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண் - 31

## அறிவிப்புகள்
## 2016 - 2017

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

மானியக் கோரிக்கை எண்–31

# அறிவிப்புகள்
# 2016–2017

**டாக்டர் எம். மணிகண்டன்**
தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்

## தகவல் தொழில்நுட்பவியல் துறை அறிவிப்புகள்

1. மாநிலத்தில் உள்ள அனைத்து முகவரிகளையும் விரைவாகக் கண்டறியும் வகையில் அனைத்து முகவரிகளுக்கும் தரப்படுத்தப்பட்ட டிஜிட்டல் முகவரி எண் உருவாக்குதல்

   (Creation of **Standardised Digital Address Number** for all addresses in the State to enable quick identification of addresses)

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து இடங்கள் மற்றும் முகவரிகளுக்கு தரப்படுத்தப்பட்ட டிஜிட்டல் மேற்கோள் அமைப்பு ஒன்றை நிறுவ **மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

ஆணையிட்டுள்ளார்கள். இதன் மூலம் மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு முகவரியும் அறிவியல் பூர்வமாக வடிவமைக்கப்பட்ட வரிவடிவ குறியீடு (Alpha Numeric code) எனப்படும் தரப்படுத்தப்பட்ட டிஜிட்டல் முகவரி எண் மூலம் கண்டறியப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கட்டடங்கள் மற்றும் அவற்றின் முகவரிகளை எளிதில் மிகத் துல்லியமாகக் கண்டறிய இந்த அமைப்பு உதவும். இதற்கென “மாநில டிஜிட்டல் முகவரி பதிவேடு” ஒன்று உருவாக்கப்பட்டு, அது அனைத்து முகவரிகளின் மையப்படுத்தப்பட்ட டிஜிட்டல் களஞ்சியமாக விளங்கும். இந்த டிஜிட்டல் குறியீடு முறை நிலப்பிரிவுகளின் (Land parcels) நிலஅளவை மற்றும் உட்பிரிவு எண்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.



இது காணிப்படங்களுடன் (Cadastral maps) இணைக்கப்பட்டு வருவாய் மற்றும் நில அளவை துறைகளுக்கு பயனுள்ளதாக விளங்கும்.

இந்த அமைப்பு ஏற்கனவே இருக்கும் கட்டடங்கள் இடம்பெற்றுள்ள நிலப்பிரிவுகள் (Land parcels) மற்றும் அதன் முகவரிகளுடன் இணைக்கப்படும். இதன் முலம் மாநிலத்தில் உள்ள அனைத்து முகவரிகளையும் விரைவாகக் கண்டறிய இயலும்.

## 2. தேசிய மக்கள் தொகை பதிவேடு (NPR) / ஆதார் அங்கீகாரமுள்ள மின்கையொப்ப (e-Sign) பயன்பாடு உருவாக்குதல்

## (National Population Register (NPR) / Aadhaar Authenticated e-Sign Application)

மின்கையொப்பம் (e-Sign) என்பது மக்கள் இணையத்தின் வழியாக ஆவணங்களில் கையொப்பமிட வழிவகுக்கும் டிஜிட்டல் கையொப்பம் ஆகும். இந்த மின்கையொப்பம் மூலமாக, வன்பூட்டு (USB) / ஸ்மார்ட் கார்டு (Smart Card) இல்லாமலே, அரசின் அனைத்து இணைய வழி சேவைகளையும் முழுவதுமாக வழங்க முடியும்.



இது மக்கள் தங்களுடைய தேசிய மக்கள் தொகை பதிவேடு (NPR) /ஆதார் அட்டையின் அங்கீகாரத்தின் மூலமாக, ஆவணங்களில் மின்கையொப்பமிட வழிவகை செய்யும் ஒரு புரட்சிகரமான சேவையாகும். ஒரு மின்கையொப்பத்திற்கு குறைந்தபட்ச செலவினமாக ரூபாய் ஐந்தும் மற்றும் பிற அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு கட்டணங்களுக்கென மூலதனமாக ரூபாய் 1 கோடியே 20 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டு, முதற்கட்டமாக 10 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த **மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டம் மத்திய அரசு நிறுவனமான சி–டாக் (C-DAC) நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும்.

## 3. 130 அரசு பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தமிழ்நாடு ஐசிடி நிறுவனத்தின் இலவச உறுப்பினராக்குதல்

(Free Membership Services of ICT Academy of Tamil Nadu for 130 Government Engineering, Arts and Science Colleges)

தரமான ஆசிரியர்களே மாணவர்களின் தரத்தை நிர்ணயிப்பதோடு, அடுத்த தலைமுறை மனிதவளத்தின் தரத்தையும் நிர்ணயிப்பர். மாணவர்கள் தாம் பயிலும் பாடத்திட்டத்தினைத் தாண்டி, பலதரப்பட்ட திறன்களை வளர்த்துக் கொள்ள உதவுவதும், ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்றவாறு அண்மைக்கால தொழில்நுட்பங்களில் தேர்ச்சியும், பயிற்சியும் அளிப்பதும் அவசியமானதாகும்.



தமிழகத்திலுள்ள 500–க்கும் மேற்பட்ட உயர்கல்வி நிறுவனங்களை தனது ஆண்டு சந்தா உறுப்பினர்களாக தமிழ்நாடு ஐசிடி நிறுவனம் (ICT Academy of Tamil Nadu) கொண்டுள்ளது. இந்த உறுப்பினர்களுக்கு ஆசிரியர் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள், தொழில்–கல்வி நிறுவன கூட்டுக் கலந்தாய்வுகள், தொழில் தொடர்புடைய பாடத்திட்டங்கள், கற்கை தளங்களுக்கான அனுமதி, இணையவழி மதிப்பீட்டுத் தேர்வுகளுக்கான அனுமதி, 5 சர்வதேச காலாண்டு ஆய்வு சஞ்சிகைகள் (Journals), ஐசிடி கனெக்ட் இதழ்கள் (Magazines) மற்றும் ஐசிடி நிறுவனம் நடத்தும் கருத்தரங்குகள், மாநாடுகளில் பங்கேற்றல் போன்ற சேவைகளை வழங்கி வருகிறது.

தமிழ்நாடு ஐசிடி நிறுவனத்தின் இச்சேவைகளை தமிழக அரசின் 130 பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களும் பெற்றிடும் வகையில் கல்லூரி ஒன்றுக்கு ரூ.50,000/– என்ற மதிப்பீட்டில், 130 அரசுக் கல்லூரிகளுக்கு ரூ.65 இலட்சம் என்ற செலவினத்தில் அவர்களை தமிழ்நாடு ஐசிடி நிறுவனத்தின் இலவச சந்தாதாரர்களாக இணைக்க **மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

இத்திட்டம் தமிழ்நாடு ஐசிடி நிறுவனத்தின் சொந்த தொகுப்பு நிதியிலிருந்து செயல்படுத்தப்படும்.



4. 10,000 பட்டப்படிப்பு இறுதி ஆண்டு மாணாக்கர்களுக்கு தமிழ்நாடு ஐசிடி நிறுவனம் மூலம் தகவல் தொழில்நுட்ப மற்றும் மென்திறன் பயிற்சி வழங்குதல்

(Training for 10,000 Graduating College Students on IT and Soft Skills by ICT Academy of Tamil Nadu)

பல பன்னாட்டு நிறுவனங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள தமிழ்நாட்டை, புதிய கண்டுபிடிப்புகளின் அறிவுசார் மையமாக மாற்றிடும் வகையில், உடனடியாகப் பணியமர்த்தக்கூடிய தொழில் அணுகுத்திறன் பெற்ற ஆற்றல்மிக்க மனிதவளம் உருவாக்கப்படுவது இன்றியமையாத ஒன்றாகும்.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் (IT and IT Enabled Services) துறைக்கான திறன் தேவை குறித்த பகுப்பாய்வின் அடிப்படையில், தமிழ்நாடு ஐசிடி நிறுவனம் (ICT Academy of Tamil Nadu) தகவல் தொழில்நுட்பத்திறன் மற்றும் மென்திறன் அடங்கிய ஒரு சிறந்த வேலை வாய்ப்புத்திறன் மேம்பாட்டுத் திட்டக் கட்டமைப்பை உருவாக்கி, அதன் மூலம் வழங்கப்படும் அனைத்துப் பயிற்சிகளையும் துறைசார் மாற்றங்களுக்கேற்ப அந்தந்த துறை நிறுவனங்களின் துணையுடன் வடிவமைத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் மாணவர்கள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் துறையில் தொடக்கநிலை



வேலை வாய்ப்புகளை எளிதில் பெற்றிட முடியும்.

தமிழ்நாடு ஐசிடி நிறுவனத்தால் மாணவர்களுக்கு வழங்கப்படும் இத்தகவல் தொழில்நுட்ப, மென்திறன் மற்றும் வேலை வாய்ப்புத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை தமிழகத்தில் உள்ள பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் 10,000 மாணாக்கர்கள் பெற்றிடும் வகையில் ஒரு மாணவருக்கு ரூ.5,000/– என்ற மதிப்பீட்டில், 10,000 மாணாக்கர்களுக்கு ரூ.5 கோடி செலவினத்தில் இலவசமாக அளித்திட **மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

மொத்தம் 150 மணி நேர வகுப்புகளைக் கொண்ட இப்பயிற்சிகளில்

கிராமப்புற, ஆதிதிராவிட, பழங்குடியின மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இப்பயிற்சிக்கான செலவினம் முழுவதையும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஏற்றுக்கொள்ளும்.

**டாக்டர் எம். மணிகண்டன்**
தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்